# "ஏழைகளை நினைத்துக் கொள்ளுங்கள்" [20:1–6]

*அப். நட. 20ம் அதிகாரத்தின் முதல் ஆறு வசனங்களை நாம் வாசிக்கும் பொழுது, பவுல் தமது மூன்றாம் ஊழியப் பயணத்தை முடிக்கையில் கிரேக்க நாட்டிற்குச் சென்று வந்ததன் சுருக்கக் குறிப்பாக அது காணப்படுகின்றது:*

> *கலகம் அமர்ந்த பின்பு, பவுல் சீஷரைத் தன்னிடத்திற்கு வரவழைத்து, வினவிக் கொண்டு, மக்கெதோனியாவுக்குப் போகப் புறப்பட்டான். அவன் அந்தத் திசைகளிலே சுற்றி நடந்து, சீஷர்களுக்கு வெகுவாய்ப் புத்தி சொல்லி, கிரேக்கு தேசத்திலே சேர்ந்தான். அங்கே மூன்று மாதம் சஞ்சரித்த பின்பு, அவன் கப்பல் ஏறி, சீரியா தேசத்துக்குப் போக மனதாயிருந்த போது, யூதர்கள் அவனுக்குத் தீமை செய்யும்படி இரகசியமான யோசனை கொண்டிருந்தபடியால், மக்கெதோனியா தேசத்தின் வழியாய்த் திரும்பிப் போகத் தீர்மானம் பண்ணினான், பெரோயா ஊரானாகிய சோபத்தரும், தெசலோனிக்கேயரில் அரிஸ்தர்க்கும், செக்குந்தும், தெர்பையனாகிய காயுவும், தீமோத்தேயும், ஆசியா நாட்டாராகிய தீகிக்கும், துரோப்பீமும், ஆசியா நாடு வரைக்கும் அவனுக்கு வழித்துணையாய் வந்தார்கள். இவர்கள் முன்னாகப் போய், துரோவா பட்டணத்திலே எங்களுக்காகக் காத்திருந்தார்கள். புளிப்பில்லாத அப்பப் பண்டிகை நாட்களுக்குப் பின்பு நாங்கள் கப்பல் ஏறிப் பிலிப்பி பட்டணத்தை விட்டு ஐந்து நாளைக்குள்ளே துரோவா பட்டணத்துக்கு அவர்களிடத்தில் வந்து, (20:1-6அ).*

வேதவசனத்தின் மற்ற பகுதிகளைப் போலவே, முதல் பார்வையில் இவ்வசனங்கள் அவ்வளவு முக்கியமற்றவை போலவும், ஒருவேளை மந்தமானவை போலவும் காணப்பட்டாலும், இவைகளை ஆழமாகப் படிக்கும் பொழுது வளமான

சத்தியங்களை வழங்குகின்றன.

இந்த ஆறு வசனங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள கால அளவை நாம் மறுபடி கட்டியெழுப்பிக் காணுகையில், இவ்வசனப் பகுதியானது குறைந்தது, "ஓராண்டுப் பயணம் மற்றும் சாதனை"யைத் தொகுத்துக் கூறுவதைக் காணுகின்றோம். (ஏறக்குறைய 2 ஆண்டுகள் என புரூஸ் ஆலோசிக்கின்றார்.) பவுலின் பெருங்கவலைகளில் ஒன்று இருபதாம் அதிகாரத்தின் முடிவுப் பகுதிக்கு அருகாமையில் அவரது வார்த்தைகளில் சுருக்கிக் கூறப்பட்டுள்ளது: "... பலவீனரைத் தாங்கவும், வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்று ..." (வ. 35ஆ). அந்தக் கணத்தில், "பலவீனர்" என்பது "எருசலேமில் இருந்த பரிசுத்தவான்களில் ஏழைகள்" (சிலர்) என்ற விசேஷக் குறிப்பைப் பெற்றிருந்தது (ரோமர் 15:26).

ஆரம்ப முதல் எருசலேமில் இருந்த சபையானது தேவையில் இருந்த அதிகமான உறுப்பினர்களை அது பெற்றிருந்தது. அது நிலைநாட்டப்பட்டு குறுகிய காலத்திலேயே, சொத்துக்கள் வைத்திருந்த உறுப்பினர்கள், ஒன்றும் இல்லாதவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டியதாயிருந்தது (அப். 2:44, 45; 4:32-35; 6:1). பஞ்சம் ஒன்று தாக்கிய போது, அந்தியோகியாவிலிருந்த சபையானது தேவையான உதவியை எருசலேம் மற்றும் யூதேயாவுக்கு அனுப்பியது (11:27-30; 12:25). பவுலும் பர்னபாவும் எருசலேமுக்கு விசேஷித்த பயணம் மேற்கொண்ட போது, அவர்களிடத்தில் பேதுருவும் மற்ற முன்னோடிகளும் "ஏழைகளை நினைத்துக் கொள்ளும்படி" - குறிப்பாக யூத கிறிஸ்தவர்களில் ஏழையாயிருந்தவர்களை (அதிலும் விசேஷமாக எருசலேமில் இருந்தவர்களை) நினைத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டார்கள். பவுல் தாம் "அப்படிச் செய்யும்படி. ... கருத்துள்ள" (கலா. 2:10)வராய் இருந்ததாகக் கூறினார்.

பவுல் தமது இரண்டாவது அல்லது மூன்றாவது ஊழியப் பயணத்தின்போது, எருசலேம் சபைக்கு நிதி வசூல் செய்யும் கருத்தொன்றை வரைவு செய்தார்.[1] யூதர்களுக்குப் புறஜாதியாரின் அன்புக் காணிக்கையானது சபையின் அந்த இரண்டு பிரிவினருக்கும் இடையில் உறவுகளை மேம்படுத்தும் என்று

அவர் நம்பினார் (2 கொரி. 9:11-14). பவுல் தமது மூன்றாம் பயணம் முழுவதிலும், இந்த நிதி வசூல் பணியில் ஈடுபட்டி ருந்தார் (1 கொரி. 16:1, 2; 2 கொரி. 8:10). இப்பொழுது அவர் அப்பணியை முடித்து, அந்த நிதியை எருசலேமுக்குக் கொண்டு செல்லத் தயாரானார்.

இந்த நோக்கத்தை நாம் சிந்தையில் வைத்து, அப். 20:1-6ன் மேம்போக்கான அர்த்தத்திற்குக் கீழ் ஆராய்ச்சி செய்வோம்.

## அக்கறை (20:1)

வசனம் 1 அக்கறை நிறைந்ததாக இருக்கின்றது: "கலகம் அமர்ந்த பின்பு, பவுல் சீஷரைத் தன்னிடத்திற்கு வரவழைத்து, வினவிக் கொண்டு, மக்கெதோனியாவுக்குப் போகப் புறப் பட்டான்.'' முதலாவதாக, அவர் எபேசுவில் விட்டு வந்த கிறிஸ்தவர்களைப் பற்றிய அக்கறை அவருக்கு ஏற்பட்டது. "பவுல் சீஷரைத் தன்னிடத்திற்கு வரவழைத்து" - ஒருவேளை அந்தக் கலகத்தில் அவர்களில் யாரேனும் காயமடைந்தார்களா என்று காண்பதற்காக, தாம் ஏன் அரங்க சாலைக்குள் பாய்ந்து வரவில்லை என்பதை விளக்குவதற்காக, மற்றும் தாம் அங்கிருந்து செல்லுமுன், நிச்சயமாகவே அவர்களை உற்சாகப் படுத்துவதற்காக இவ்வாறு பவுல் செய்திருப்பார். இரண்டாவ தாக, ஏற்கனவே ஆலோசிக்கப்பட்டபடி, "எருசலேமில் இருந்த பரிசுத்தவான்களில் ஏழைகளாய் இருந்தவர்கள்'' பற்றிய அக்கறை இருந்தது. தேவையில் இருந்தவர்களுக்கு நிதி உதவி சேகரிப்பதற்காகப் பவுல் மக்கெதோனியா நோக்கிச் சென்று கொண்டிருந்தார். இருப்பினும், இன்னொரு கவலையும் கூடப் பவுலுக்கு உறக்கமற்ற இரவுகளைக் கொடுத்திருக்க வேண்டும் - இதுவே அவர் கிரேக்கம் நோக்கிச் செல்ல இன்னொரு காரணமாய் இருந்தது: அது கொரிந்து சபையை அழிக்கும்படி அச்சுறுத்திய பிரச்சனைகளாகும்.

நமது முந்திய பாடத்தில், தீமோத்தேயுவின் பயணத்தைத் தொடர்ந்து தீத்துவைப் பவுல் கொரிந்துவுக்கு அனுப்பியதாகக் குறிப்பிட்டோம் (2 கொரி. 2:12, 13; 7:5-7; 8:6, 23). கொரிந்தியர் கள் எப்படி முன்னேற்றம் அடைந்து கொண்டிருந்தார்கள் என்பது பற்றி தீத்து பவுலுக்கு வார்த்தை கொண்டு வரவேண்டி

*யதாயிருந்தது. தீத்து அவரை, கொரிந்துவில் இருந்து மக்கெதோனியாவுக்கும், பிறகு துரோவாவுக்கும், கடைசியில் எபேசுவுக்கும் அழைத்துச் செல்லத் திட்டமிட்டிருந்தார். பவுல் எபேசுவை விட்டுப் புறப்பட்டு, மக்கெதோனியா செல்லும் வழியில் முதலாவதாக அவர் துரோவா பட்டணத்தில் தங்கினார் (2 கொரி. 2:12) அங்கு அவர் தீத்துவுடன் இருக்கலாம் என்று ஏற்கனவே முடிவு செய்திருந்தார்.*

*துரோவா என்பது ஏஜியன் கடலின் துறைமுகமாயிருந்தது, (வரைபடத்தில் காணவும்), அங்கு பவுல் இதற்கு முன், மக்கெதோனிய தேசத்தானின் அழைப்பை (தரிசனத்தில்) பெற்றிருந்தார் (அப். 16:8-10). அந்தச் சுருக்கமான பயணத்தின் போது, பவுல் அங்கு சிறிதளவே பிரசங்கித்திருந்தார் அல்லது பிரசங்கிக்கவே இல்லை. இருப்பினும், இம்முறை, அவருக்கு "கதவு திறக்கப்பட்டிருந்தது" (2 கொரி. 2:12); அந்த நகரமானது நற்செய்தி ஊழியத்திற்கென்று தயாராயிருந்தது. பவுல் அந்த வாய்ப்புக்கு பவுலினுடையதல்லாத வகையில் பதில்செயல் செய்தார்:[2] அவர் கொரிந்துவைப் பற்றி அதிகம் அக்கறை கொண்டிருந்ததால், அந்தச் சூழ்நிலையின் அநுகூலத்தைப் பயன்படுத்த அவரால் முடியாதிருந்தது. பின்னாளில் அவர் இவ்வாறு எழுதினார்: "நான் என் சகோதரனாகிய தீத்துவைக் காணாததினால், என் ஆவிக்கு அமைதலில்லாதிருந்தது. ஆதலால் நான் அவர்களிடத்தில் அனுப்புவித்துக் கொண்டு, மக்கெதோனியா நாட்டுக்குப் புறப்பட்டுப் போனேன்'' (2 கொரி. 2:13).*

*பவுல், மக்கெதோனியாவில் தீத்துவை இடைமறிக்கலாம் என்று நம்பியிருந்தார், ஆனால் தீத்து அங்கு இல்லை. அந்த இளம் பிரசங்கியாருக்காகப் பவுல் காத்திருக்கையில், எருசலே முக்கான நிதி வசூலில் ஈடுபட்டார் - அவர் மக்கெதோனியர் களின் தாராள குணத்தைக் கண்டு மகிழ்வான ஆச்சரியம் அடைந்தார் (2 கொரி. 8:1-5) - ஆனாலும் அவர் இன்னமும் அக்கறையினால் நிறைந்திருந்தார். பின்னாளில் அவர், "எப்படியென்றால், நாங்கள் மக்கெதோனியா நாட்டிலே வந்த போது, எங்கள் சரீரத்திற்கு இளைப்பாறுதல் ஒன்றுமில்லாமல், எப்பக்கத்திலேயும் உபத்திரவப்பட்டோம்; புறம்பே போராட்டங்களும், உள்ளே பயங்களும் இருந்தன" (2 கொரி. 7:5) என்று*

*கூறினார். "போராட்டங்கள்" என்பவை அநேகமாக அவரை தெசலோனிக்கே மற்றும் பெரோயாவை விட்டுத் துரத்திய யூதர்களுடன் ஏற்பட்டிருக்கலாம். மற்ற "பயங்களுடன்", கொரிந்துவில் இருந்த கிறிஸ்தவர்கள் மிகக் குறைவாக பதில் செயல் செய்ததாக அவர் பயந்திருந்தார். (பவுலும் கூட மோசமான நாட்கள் பெற்றிருந்தார்; நீங்கள் மோசமான நாட்களைப் பெற்றிருக்கையில் கர்த்தர் உங்களைக் கைவிடுவதில்லை.)*

*கடைசியில் தீத்து நல்ல செய்தியுடன் வந்து சேர்ந்தார். பொதுவாக, பவுலின் போதனைகள் மற்றும் எச்சரிக்கைகளுக்குக் கொரிந்துவில் இருந்த சபையானது நன்றாகப் பதில் செயல் செய்திருந்தது. பின்வரும் வார்த்தைகளில் பவுல் தமது நிம்மதியைப் பற்றி எழுதினார்:*

> *ஆகிலும், சிறுமைப்பட்டவர்களுக்கு ஆறுதல் செய்கிற தேவன் தீத்து வந்ததினாலே எங்களுக்கு ஆறுதல் செய்தார். அவன் வந்ததினாலே மாத்திரமல்ல, உங்கள் வாஞ்சையையும், உங்கள் துக்கிப்பையும், என்னைப் பற்றி உங்களுக்கு உண்டான பக்தி வைராக்கியத்தையும் அவன் கண்டு, உங்களால் அடைந்த ஆறுதலைத் தெரியப்படுத்தினதாலும், நானும் ஆறுதலடைந்து அதிகமாய்ச் சந்தோஷப்பட்டேன் (2 கொரி. 7:6, 7).*

*2 கொரிந்தியர் என்று நாம் அழைக்கும் இந்நிருபத்தைப் பவுல் சொல்ல, இன்னொருவர் எழுதினார், (தீமோத்தேயு எழுதியிருக்கலாம்), பிறகு அவர் தீத்துவை இரண்டு துணையாளர்களுடன் கொரிந்துவுக்குத் திரும்பவும் அனுப்பினார் (2 கொரி. 8:16-24). (பெயர் கூறப்படாத அவ்விரு சகோதரர்கள் யார் என்று நாம் அறிவதில்லை, பவுல் ஏன் அவர்களுடைய பெயர்களைக் குறிப்பிடவில்லை என்பதையும் நாம் அறிவதில்லை. லூக்கா, பர்னபா மற்றும் தீமோத்தேயு போன்ற பெயர்கள் ஆலோசிக்கப்பட்டுள்ளன. ஒருவேளை, சபையின் செய்தியாளர்களாக அப். 20:4ல் குறிப்பிடப்பட்டுள்ளவர்களில் இருவர் இவ்விடத்தில் கூறப்பட்டிருக்கலாம்.)*

*பவுல் தமது சகோதரர்களின்மேல் கொண்ட அக்கறையின் தீவிரத்தைப் பற்றிய மனப்பதிவுகளின்றி நாம் 2 கொரிந்தியர்*

*நிருபத்தை வாசிக்க முடியாது. அவருடைய ஆவிக்கு "அமைத லில்லாதிருந்தது" (2:13; 7:5); அவர் "பயங்கள்" (7:5) நிறைந் தவரானார்; அவர் "சிறுமைப்பட்டவரானார்" (7:6;* NIV*). நாமும் கூட, நமது சகோதரர்களைப் பற்றிய ஆழமான அக்கறையி னால் பட்சிக்கப்பட வேண்டும் - அதிலும் விசேஷமாக, அவர்கள் சரீரத் தேவைகளில் நமது நடக்கை இவ்விதமாய் இருக்க வேண்டும் (இது பவுல் எருசலேமில் இருந்த கிறிஸ்தவர் களுக்காக இதயம் கனிந்தது போல் இருக்க வேண்டும்), மற்றும் அவர்கள் ஆவிக்குரியவற்றில் குறைவு படும்போது (பவுல் கொரிந்தியர்களின் குறைகளினால் பாதிக்கப்பட்டது போல) நாமும் இருதயத்தில் உணர்வு பெற வேண்டும்! பவுலின் பின்வரும் வார்த்தைகள் நம் எல்லாருக்கும் புத்திமதி கூறுகின்றன:*

> *சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றைக் குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படி … ஆதலால் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங் களும் கூடப் பாடுபடும்; ஒரு அவயவம் மகிமைப் பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும். நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள் (1 கொரி. 12:25-27).*

## *பங்களிப்பு (20:2-4)*

*சகோதரர்கள் எருசலேமுக்கான தங்களின் பங்களிப்பை நிறைவாக்கும்படி உற்சாகப்படுத்துதல் என்பது பவுல் 2 கொரிந்தியர் நிருபத்தை எழுதியதின் நோக்கங்களில் ஒன்றாக இருந்தது. மக்கெதோனியர்களின் உதார குணத்தைப் பின் பற்றும்படி கொரிந்தியர்களைப் பவுல் வற்புறுத்தினார் (அதிகாரம் 8 மற்றும் 9).*

*பவுல் நிருபத்தை அனுப்பிய பிறகு, மக்கெதோனியாவில் அவர் சற்றுக் காலம் பிரசங்கித்தல் மற்றும் போதித்தலில் செலவிட்டார். (பிலிப்பி, தெசலோனிக்கே, பெரோயா மற்றும் அங்கிருந்த ஊர்களில் இருந்த கிறிஸ்தவர்களுடன் அவர் மறுபடி மகிழ்வுடன் இணைந்ததை நான் கற்பனை செய்ய முடிகின்றது). இந்தக் காலகட்டத்தில், இல்லிரிக்கம் நாட்டில் பிரசங்கிப்*

பதற்காக (ரோமர் 15:19) அவர் வடமேற்குப் பகுதியிலும் பயணம் செய்திருக்கலாம் (வரைபடத்தில் காணவும்). லூக்கா எளிமையாக, "அவன் அந்தத் திசைகளிலே சுற்றி நடந்து, சீஷர்களுக்கு வெகுவாய்ப் புத்தி சொல்லி,[3] கிரேக்க [அதாவது அகாயா] தேசத்திலே சேர்ந்தான்" (அப். 20:2) என்று பதிவு செய்தார். பிறகு அவர், "அங்கு மூன்று மாதம் சஞ்சரித்த பின்பு"[4] (வ. 3அ) என்று குறிப்பிட்டார். இம்மூன்று மாதங்களின் பெரும் பகுதியில், பவுல் கொரிந்துவில் காயு (ரோமர் 16:23; டைட்டியாஸ் யுஸ்துவின் [18:7] மூன்றாவது பெயர் காயு என்பதாகும் என்று சிலர் யூகித்துள்ளனர்) என்ற சகோதரரின் விருந்தினராக இருந்தார்.

பவுல் கொரிந்துவில் இருக்கையில் தமது தலைசிறந்த படைப்பாகிய ரோமருக்கு எழுதிய நிருபத்தை இயற்றினார்.[5] மேம்போக்காகப் பார்க்கையில் பவுல் ரோமாபுரியைக் காண்பதற்குத் தமக்குள்ள எதிர்பார்ப்புடன் அதை எழுதினார் என்று காணப்படுகின்றது (ரோமர் 1:9-15; 15:22-29). ஆயினும் அவர் தாம் எருசலேம் செல்லுகையில் எதிர்கொள்ள வேண்டி யிருந்த அபாயங்களைப் பற்றி ஏற்கனவே அறிந்திருந்தார் (ரோமர் 15:31; அப். 20:22-25; 21:13, 14ஐக் காணவும்). ரோமருக்கு எழுதியதன் மூலம் பவுல், தாம் அங்கு சென்றாலும் செல்லாவிட்டாலும் அந்தப் பேரரசின் மையப்பகுதியில் "கிறிஸ்தவத்தைப் பற்றிய ஒரு சுருக்கக் கூற்றினை" விட்டுச் சென்றவரானார்.

ரோமருக்குப் பவுல் எழுதியபோது, எருசலேமுக்கான நிதிவசூலைப் பொறுத்தமட்டில் கொரிந்து பட்டணத்தில் எல்லாம் நல்ல முறையில் நடந்து கொண்டிருந்தது. அகாயா விலிருந்து கிறிஸ்தவர்கள், "எருசலேமிலுள்ள பரிசுத்தவான் களுக்குள்ளே இருக்கிற தரித்திரருக்காகச் சில பொருள் சகாயம் செய்ய விருப்பங் கொண்டிருக்கிறார்கள்" (ரோமர் 15:26) என்று அவர் கூறினார். "அவர்கள் இதை செய்வதற்கு சந்தோஷப் படுகிறார்கள்" என்று NCV மொழிபெயர்ப்பு கூறுகிறது.

இந்த அன்பின் காணிக்கைக்குப் பங்களித்திருந்த பல்வேறு சபைகளின் பிரதிநிதிகளுடன் பவுல் கொரிந்துவில் இணைந் திருக்கலாம் (அப். 20:4).[6] (தீமோத்தேயுவுடன் சோபத்தரும் இருந்திருக்கலாம்.) தாங்கள் வந்திருந்த சபைகள் அளித்திருந்த

*காணிக்கைகளை "சபையின் செய்தியாளர்களாயிருந்த" இவர்கள் (2 கொரி. 8:23) சேர்ந்த பொழுது பங்களிப்பு தயாராயிற்று.*

*கிறிஸ்துவுக்குள் நமது சகோதரர்களிடத்தில் நாம் அக்கறை யுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்று நான் முன்னரே கூறினேன். மக்கெதோனியா, அகாயா, ஆசியா மற்றும் கலாத் தியா ஆகிய நாடுகளில் இருந்த கிறிஸ்தவர்களின் எடுத்துக் காட்டானது, நமது அக்கறை வெளிப்படுத்தப்பட வேண்டியது தேவை என்று நமக்குப் போதிக்கின்றது. எப்பொழுதும் நடைமுறை மனிதரான யாக்கோபு கருத்துள்ள பின்வரும் கேள்வியைக் கேட்டார்: "ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும் போது, உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: 'நீங்கள் சமா தானத்தோடே போங்கள், குளிர் காய்ந்து பசியாறுங்கள்' என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன?" (யாக். 2:15, 16).*

## *எச்சரிக்கை (20:4)*

*அப். 20:4ல் "பெரோயா ஊரானாகிய சோபத்தரும், தெசலோனிக்கேயரில் அரிஸ்தர்க்கும், செக்குந்தும்,[7] தெர்பை யனாகிய காயுவும்,[8] தீமோத்தேயும், ஆசியா நாட்டாராகிய தீகிக்கும்[9] துரோப்பீமும்[10]...." என்ற ஏழு மனிதர்கள் அட்ட வணைப்படுத்தப்பட்டார்கள். மக்கெதோனியாவிலிருந்த சபைகள் சோபத்தர், அரிஸ்தர்க்கு மற்றும் செக்குந்து ஆகி யோரால் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டன. கலாத்தியாவில் இருந்த சபைகள் காயு மற்றும் தீமோத்தேயும் ஆகியோரால் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டன. கலாத்தியாவில் இருந்த சபைகள் காயு மற்றும் தீமோத்தேயு ஆகியோரால் பிரநிதித் துவப்படுத்தப்பட்டன. ஆசியாவில் இருந்த சபைகள் தீகிக்கு மற்றும் துரோப்பீமு ஆகியோரால் பிரதிநிதித்துவப் படுத்தப் பட்டன. இந்த மனிதர்களும், பவுலுடன் பிரயாணம் செய்த மற்றவர்களும் பங்களிப்பை எடுத்துச் செல்ல வேண்டியிருந் தது-ஆனால் ஏன் அதைச் செய்ய வேண்டியிருந்தது?*

*பவுல் ஒரு சிறிய சொத்தையே தம்முடன் எடுத்துச்*

*சென்றதால், அந்த மனிதர்கள் அவருக்கு மெய்க்காப்பாளர் களாக இருந்தார்கள் என்று சிலர் யோசனை தெரிவித்துள்ளார் கள்.*[11] *(நாணயங்களாய் இருந்திருக்க வேண்டிய) இந்தப் பங்களிப்பானது இந்த மனிதர்களிடம் பகிர்ந்தளிக்கப்பட்டு, அவர்கள் அவைகளை மறைவாக வைத்துக் கொண்டதால், பெரும் பணத்தை அவர்கள் எடுத்துச் சென்றது வெளிப்படை யாகக் காணப்படாதபடி அவர்கள் சென்றார்கள் என்று சிலர் யூகித்திருக்கின்றனர். புறஜாதிக் கிறிஸ்தவர்களின் முதன்மை முன்னுதாரணங்கள் யூதக் கிறிஸ்தவர்களின் மனதில் ஆழப் பதியவும், புறஜாதியாருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட உண்மையைக் குறித்து அவர்கள் நலமாக உணரவும் பவுல் இந்த செயலைச் செய்தார் என்பது ஆர்வமிக்கதொரு சாத்தியக் கூறு ஆகும்.*[12]

*இந்தக் கருத்துக்கள், மதிப்புடையவைகளாயிருக்கலாம் அல்லது இல்லாதிருக்கலாம்-ஆனால் இம்மனிதர்கள் யாவரும் காணிக்கையில் இருந்து பவுல் தனிப்பட்ட ஆதாயம் அடைந்து விடக்கூடிய எந்த சாத்தியக் கூறையும் நீக்கிப்போடுவதற்காகப் பவுலின் வேண்டுகோளின்படியே தேர்ந்து கொள்ளப் பட்டிருந்தார்கள். சேகரிப்பைப் பற்றிக் கொரிந்தியருக்கு எழுதியபோது, அவர்: "நான் [அங்கு] வரும்போது உங்கள் உபகாரத்தை எருசலேமுக்குக் கொண்டு போகும்படிக்கு, நீங்கள் தகுதியுள்ளவர்களாகக் குறிக்கிறவர்கள் எவர்களோ, அவர்களிடத்தில் நிருபங்களைக் கொடுத்து, அவர்களை அனுப்புவேன். நானும் போகத் தக்கதானால், அவர்கள் என்னு டனே கூட வரலாம்" (1 கொரி. 16:3, 4) என்று கூறினார். அவர்களுடைய நன்கொடையை எருசலேமுக்குக் கொண்டு செல்வதற்குப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியதாய் இருந்தது (பவுல் தாமே போக வேண்டும் என்று வலியுறுத்த வில்லை என்பதைக் கவனியுங்கள்). நன்கொடை பங்களித் திருந்த அனைத்து சபைக்களுக்கும் இதே அறிவுறுத்தல் தரப்பட்டிருக்கும் என்பதில் சற்றும் சந்தேகம் இல்லை (2 கொரி. 8:19, 23ஆ).*

*களங்கத்திற்கு ஏதுவான சிறு வாடையொன்றைக் கூடத் தவிர்த்து விடுவதற்குப் பவுல் தீர்மானித்தார். அவர் கொரிந் தியருக்குத் தொடர்ந்து எழுதிய நிருபத்தில், எருசலேமுக்கு*

*அந்தப் பணத்தை எடுத்துப் போவதற்குத் தேர்வு செய்யப் பட்டிருந்த ஒரு சகோதரரைப் பற்றிப் பேசினார்: "...கர்த்தருக்கு மகிமையுண்டாகவும், ....எங்களுக்கு வழித் துணையாயிருக்கும் படி, அவன் சபைகளால் தெரிந்து ஏற்படுத்தப்பட்டவனாயும் இருக்கின்றான்" (2 கொரி. 8:19). பிறகு பவுல், தாம் ஏன் அந்த ஏற்பாட்டைச் செய்யும் யோசனை தெரிவித்தார் என்பதற்குக் காரணமும் கூறினார்: "எங்கள் ஊழியத்தினாலே சேர்க்கப்படும் இந்த மிகுதியான தர்மப் பணத்தைக் குறித்து ஒருவனும் எங்களைக் குற்றப்படுத்தாதபடிக்கு நாங்கள் எச்சரிக்கையா யிருந்து, கர்த்தருக்கு முன்பாக மாத்திரமல்ல, மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுகிறோம்" (2 கொரி. 8:20, 21). தேவன் என்ன நினைத்தார் என்பது மட்டு மல்ல, மனிதர்கள் என்ன நினைப்பார்கள் என்பதும் பவுலின் அக்கறையாயிருந்தது!*

*சில வேளைகளில் மனிதர்களிடத்தில், அவர்கள் பணத்தைக் கையாளும்போது முன் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று ஆலோசனை தருவது அவர்களைக் கலங்கச் செய்து விடுகின்றது. சிலர் இதனால் தங்கள் உணர்வுகள் புண்பட்டு, "அவர்கள் என்னை நம்பவில்லையென்றால், நான் வெளியேறிக் கொள்கின்றேன்!" என்று கதறுகின்றார்கள். பவுல், "தாம் ஒரு அப்போஸ்தலர் என்பதால் மட்டும்" தம்மேல் நம்பிக்கை வைக்கும்படிக்கு எவரொருவரையும் கேட்டுக் கொள்ள வில்லை. மாறாக காணிக்கைப் பணமானது தவறான செயல் பாட்டினால் கறைபட்டது என்ற வதந்தியைக் கூடத் தடை செய்யத் தம்மால் முடிந்த எல்லாவற்றையும் அவர் செய்தார்.*

*சமீபத்திய ஆண்டுகளில், கேள்வி கேட்காத மக்கள் கூட்டங் களில் இருந்து பணம் பறிக்கும் மத ரீதியான மனிதர்கள் பற்றிய விழிப்புணர்வு இவ்வுலகத்தில் ஏற்பட்டுள்ளது. எல்லா மதங் களுமே சுகபோகமாய் வாழ்வதற்குரிய வழியாகும் என்று சிலர் முடிவு செய்திருக்கின்றார்கள். இந்த உலகமானது கிறிஸ்துவின் மார்க்கத்தைப் பற்றியும் அவ்வித எண்ணம் கொள்ளும்படி அனுமதித்து விட நாம் தைரியமாய் விடலாகாது. கர்த்தருடைய ஊழியத்தில் பணம் ஈடுபடுத்தப் படும்போதெல்லாம் நாம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். நாம், "எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய"*

*(ரோமர் 12:17)* வேண்டும்.

## போராட்டம் (20:3-5)

பவுல் எருசலேமுக்குப் பயணம் தொடங்கத் தயாரானார், ஆனால் வழக்கம் போலவே, அவர் போராட்டம் எதுவுமின்றித் தனது திட்டத்தை நிறைவேற்றும்படி சாத்தான் அவரை விட்டுவிடவில்லை.[13] "அவன் கப்பல் ஏறி சீரியா[14] தேசத்துக்குப் போக மனதாயிருந்தபோது யூதர்கள் அவனுக்கு [பவுலுக்கு]த் தீமை செய்யும்படி இரகசியமான யோசனை கொண்டிருந்தபடியால்,[15]" (வ. 3ஆ). கல்லியோனுக்கு முன்பாக இந்த அப்போஸ்தலரை இழுத்துச் சென்று அவரைச் சங்கடத்துக்குள்ளாக்கியவர்கள் இதே யூதர்களாயிருக்கலாம் (18:12-17); சட்ட ரீதியான வழிமுறைகளில் அவர்களால் பவுலை அழிக்க முடியாதிருந்ததால், சட்டத்திற்குப் புறம்பான வழிமுறைகளை அவர்கள் கையாண்டிருக்கலாம். அங்கு ஈடுபடுத்தப்பட்ட திட்டம் என்ன என்பதை நாம் உறுதியாக அறிய முடிய வில்லை. பவுல் அநேகமாக, தாம் அதற்கு முன்பு செய்தது போலவே, கெங்கிரேயாவில் இருந்து "சீரியா தேசத்திற்குக் கடற்பயணம் போக"த் திட்டமிட்டிருக்கலாம் (18:18).[16] கொரிந்துவுக்கும் கெங்கிரேயாவுக்கும் இடையில் இருந்த மேடான நிலங்களின் வழியே அவர் கடந்து போகையில் அவரிடத்தில் வழிப்பறி[17] செய்து அவரைக் கொலை செய்யத் திட்டமிடப்பட்டிருக்கலாம்; அவர் துறைமுகத்தில் இருக்கையில் அவரைப் பிடிக்கவோ அல்லது கப்பலில் அவர் ஏறிப் பயணம் தொடங்கியதும் அவரைக் கடலில் வீசி எறியவோ அவர்கள் திட்டமிட்டிருக்கலாம்.

தேவனுடைய அருள் இரக்கத்தினால், மீண்டும் ஒருமுறை பவுலுக்கு இத்திட்டம் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டது, எனவே அவர் தமது திட்டங்களை விரைவில் மாற்றினார். அவருடைய பயணத் தோழர்கள் (துரோவாவில் சென்று அவருக்காகக் காத்திருக்க வேண்டும் என்ற அறிவுறுத்தல்களுடன் 20:4, 5)[18] கப்பல் ஏறத் திட்டமிட்டுச் செயல்பட்டுக் கொண்டிருக்கையில் பவுல் "[நீண்ட தூர, மேடான தேசத்து வழியாகிய] மக்கெதோனியா தேசத்தின் வழியாய்த் திரும்பிப்

போகத் தீர்மானம் பண்ணினான்" (வ. 3இ).

நாம் சரியானதைச் செய்ய முயற்சிக்கும் பொழுது எவ்வித மாற்றமும் இன்றி, எதிர்ப்புகள் ஏற்படும்; அப்படி ஏற்பட வேண்டும் என்பதில் சாத்தான் உறுதியுடன் இருக்கின்றான். தேவையில் இருப்போருக்கு உதவுதல் என்ற விஷயத்தில் (பவுலின் விஷயத்தில் நடந்தது போல) அவிசுவாசிகளிடமிருந்து மட்டுமே எப்பொழுதும் போராட்டம் ஏற்படுவதில்லை. சிலவேளைகளில் (நம்பினால் நம்புங்கள் நீங்கள் நம்பாவிட்டாலும் கூட) விசுவாசிகளிடமிருந்தே போராட்டம் எழுகின்றது.[19] இப்படிப்பட்ட இடையூறுகள் எதுவும், "யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மை" (கலா. 6:10) செய்யும் உங்கள் செய்கையிலிருந்து உங்களைத் தடுத்து நிறுத்த அனுமதிக்காதீர்கள்.

## முழுமையடைதல் (20:6)

மக்கெதோனியாவுக்குத் திரும்புவது என்பது பவுலின் ஆரம்பத் திட்டமாக இல்லாதிருந்தாலும், அப்பகுதியில் இருந்த சகோதரர்களை மறுபடியும் சந்தித்ததில் பவுல் மகிழ்ச்சியடைந்தார் என்றே நான் நம்புகின்றேன். பவுல், எருசலேமில் தமக்காகக் காத்திருக்கும் அபாயங்களை ஏற்கனவே அறிந்திருந்தபடியால் (ரோமர் 15:31),[20] அந்த அப்போஸ்தலர் தாம் மிகவும் அன்பு காட்டியவர்களிடத்தில் பிரியாவிடை பெற்றுக் கொண்ட போது உண்டான கண்ணீர்ப் பெருக்கைப்பற்றி ஆச்சரியம் எதுவும் ஏற்படுவதில்லை (அப். 20:22-25, 36-38ஐக் காணவும்).

கடைசியில் பவுல் தம்மைக் கப்பல் பயணத்துக்குள்ளாக்கிக் கொண்டார். "புளிப்பில்லாத அப்பப்பண்டிகை நாட்களுக்குப் பின்பு நாங்கள் கப்பல் ஏறிப் பிலிப்பி[21] பட்டணத்தை விட்டு ஐந்து நாளைக்குள்ளே துரோவா பட்டணத்துக்கு.... வந்து..."[22] (வ. 6). "புளிப்பில்லாத அப்பப்பண்டிகை" என்ற சொற்றொடர் பஸ்காவைக் குறிக்கின்றது; வருடத்தின் பருவகாலத்தை (முந்திய வசந்த காலத்தை)க் குறிப்பதற்காக லுக்கா இதைப் பயன்படுத்தினார். "நாங்கள்" என்ற வார்த்தையைக் கவனியுங்கள்; மறுபடியும் லூக்கா, பவுலின் பயணக் குழுவுடன் இணைந்

தார்.[23] இரண்டாவது ஊழியப் பயணத்தில் பவுலின் தோழர்கள் பிலிப்பி பட்டணத்தை அடைந்த வேளையில் லூக்கா தன்மைப் பெயர்ச் சொல்லை இதற்கு முன் கடைசியாகப் பயன்படுத்தி யிருந்தார் (16:11, 12, 40ஐக் காணவும்); பவுலின் மூன்றாவது பயணத்தின் முடிவில் மறுபடியும் அவருடன் சேர்ந்து கொள்ளும் வரையிலும் லூக்கா பிலிப்பி பட்டணத்தில் இருந்து கொண்டு அங்கிருந்த சகோதரர்களுடன் ஊழியம் செய்தார் என்பது இங்கு மறைமுகமான கருத்தாக இருக்கின்றது. இந்த நிகழ்ச்சி தொடங்கி, லூக்கா பவுலின் மரணம் வரையிலும் அவரை விட்டு ஒருபொழுதும் பிரிந்ததில்லை (கொலோ. 4:14; பிலே. 24; 2 தீமோ. 4:11). மீண்டும் ஒருமுறை லூக்காவும் தீமோத்தேயும் பவுலின் பக்கத்தில் இருந்தது அவருக்கு எவ்வளவு உற்சாகமாய் இருந்திருக்கும்!

பவுலும் மற்றவர்களும் துரோவாவில் இருந்தது தொடங்கி நாம் அடுத்த பாடத்தில் இவ்வரலாற்றைத் தொடருவோம். ஆயினும், இந்த சமயத்தில், தேவையில் இருந்த பரிசுத்தவான் களுக்கு நன்கொடையானது வெற்றிகரமாய்க் கொடுத்து முடிக்கப்பட்டிருக்கும் என்ற எதிர்பார்ப்பை மட்டும் இவ்விடத் தில் விட்டுச் செல்ல நான் விரும்புகின்றேன். பின்னாளில் லூக்கா, ''நாங்கள் எருசலேமுக்கு வந்தபோது, சகோதரர் எங்களைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டார்கள்'' (21:17) என்று கூறினார். மறுநாள் மூப்பர்களை அவர்கள் சந்தித்த போது (21:18), அந்த நன்கொடையானது முன் வைக்கப் பட்டிருக்கலாம் (இந்த நன்கொடையைப் பவுல் பின்னாளில், தமது "ஜனத்தாருக்கு தர்மப் பணம்" என்று அழைத்தார், 24:17). ''எருசலேமின் ஊழியத்திற்கான'' பவுலின் இச்செயலானது "பரிசுத்தவான்களால் அங்கிகரிக்கப்பட்டது" (ரோமர் 15:31) என்பது தெளிவாகும்; எல்லாம் நலமாக நடந்தது.

நிதிசேகரிப்பு என்பது சுலபமானதாய் இருந்ததில்லை-அந்தத் திட்டத்தை நிறைவேற்ற நான்கு ஆண்டுகளுக்கு மேல் ஆனது-ஆனால் பவுல் அலைவு பட்டவராய் இருந்ததில்லை; அவர் அந்தத் திட்டம் கனி தரும்படி செய்தார். நல்ல விருப்பங் கள் மட்டும் போதுமானவைகள் அல்ல; நாம் நற்செயல் ஒன்றைத் தொடங்கும் பொழுது, நாம் தொடங்கியதை நிறைவேற்ற வேண்டும் (லூக். 14:28-30; 2 கொரி. 8:6; 11).

*சர்தையில் இருந்த சகோதரர்களுக்கு இயேசு, "நீ விழித்துக் கொண்டு, ....உன் கிரியைகள் தேவனுக்கு முன் நிறைவுள்ள வைகளாக நான் காணவில்லை" (வெளி. 3:2) என்று கூறினார்!*

## முடிவுரை

*பவுலின் எடுத்துக்காட்டு மூலம், நமது சகோதரர்களைப் பற்றி அக்கறை கொள்ள வேண்டியதன் தேவையை நாம் கண்டிருக்கின்றோம். "ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனா யிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அடைத்துக் கொண்டால், அவனுக்குள் தேவஅன்பு நிலை கொள்ளுகிறதெப்படி?" (1 யோவா. 3:17) என்று யோவான் எழுதினார். "குறைச்சலுண்டென்று" என்ற சொற்றொடரானது நாம் வலியுறுத்திக் கொண்டிருந்த சரீரத் தேவைகள் உள்ளடங்கியதாய் இருக்கின்றது, ஆனால் உணர்வுத் தேவைகளும், (மிக முக்கியமாக) ஆவிக்குரிய தேவைகளும் இருக்கின்றன.*

*நமது பாடத்தை, முடிந்த அளவுக்கு நடைமுறைக் குரியதாக்குவதற்கு நாம் பின்வரும் ஐந்து பரிந்துரைகளை மேற்கொள்ளலாம்:*

*(1) கூருணர்வுடன் இருங்கள்; தேவைகள் இருக்கும் பொழுது விழிப்புணர்வுடன் இருங்கள்.*

*(2) தேவைகள் இருக்கும் பொழுது, உங்கள் இருதயத்தை இளக்கமாய்க் காத்துக் கொள்ளுங்கள். கடினம் அடைவது மிகவும் சுலபமாகும். ("இந்தப் பிரச்சனைகளைப் பெற்றிருப்பது அவர்களின் சொந்தத் தவறு ஆகும்'' என்று சிலர் கூறுகின் றார்கள்.)*

*(3) நீங்கள் எவ்விதம் உதவக் கூடும் என்பதற்கு உறுதியான, குறிப்பிட்ட திட்டங்கள் மேற்கொள்ளுங்கள்.*

*(4) எதிர்ப்பு வந்தால் ஆச்சரியப்படாதீர்கள். உங்கள் இருதயத்திலிருந்தே எதிர்ப்பு வந்தால் கூட ஆச்சரியப்படா தீர்கள்.*

*(5) நீங்கள் மேற்கொண்ட திட்டத்தைச் செயல்படுத்துங் கள். "குளிர்காய்ந்து பசியாறுங்கள்" என்று மட்டும் சொல்வோ மேயானால், நமது வார்த்தைகளுக்கு அர்த்தம் ஒன்றுமில்லை*

*(யாக். 2:16) என்பதை நினைவுகூருங்கள்.*

*பவுல் இந்த நிதியை சேகரித்து எடுத்துச் சென்றதன் அடிப்படை நோக்கம், சபையில் உறவுமுறைகளைக் காத்துக் கொள்வதுதான் என்று நான் நம்புகின்றேன். நீங்களும் நானும் மற்றவர்களுக்கு உதவி செய்வதில் நம்மையே ஒப்புக் கொடுத்தால், கர்த்தருடைய சரீரத்தில் அமைதியையும் இணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கு அதுவே முடிந்த அளவுக்கு மாபெரும் காணிக்கையாய் இருக்கலாம்!*

## *பிரசங்கக் குறிப்புகள்*

*இப்பாடத்தின் தலைப்பு ''ஏழைகளை நினைத்துக் கொள்ளுங்கள்'' என்றிருந்தாலும், பரிசுத்தவான்களில் ஏழை களாய் இருந்தவர்கள் மீதே நான் கவனம் செலுத்தினேன். நீங்கள் எல்லா ஏழைகளையும் உள்ளடக்க விரும்பலாம். பொதுவாக ஏழைகள் மீது பரிதாபப்பட வேண்டியது பற்றி வேதாகமம் அதிகமாய் கூறுகின்றது. இக்கருத்தைத் தொடங்கு வதற்குச் சில வேதவசனப் பகுதிகள் இங்கு தரப்பட்டுள்ளன: மத்தேயு 19:21; லூக்கா 14:13, 21; 19:8; 2 கொரிந்தியர் 9:9; யாக்கோபு 2:2-6.*

*இந்தப் பிரசங்கத்தில் நான், எருசலேமில் தேவையில் இருந்த பரிசுத்தவான்களுக்கென்று பணம் சேகரித்ததை முக்கியத்துவப் படுத்தினேன். பவுலின் மூன்றாவது பயணத்தின் முடிவுரையை நீங்கள் சுருக்கிக் கூற விரும்பினால், "பவுலின் பிரிவு உபசாரப் பயணம்" என்பதின் மேல் ஒரு பாடத்தை நீங்கள் பிரசங்கிக்க விரும்பலாம் (அமெரிக்க நாட்டில் நன்கு அறியப்பட்ட இசைக் கலைஞர்கள் தாங்கள் ஓய்வு பெறுவதை அறிவிக்கும் பொழுது, பொதுவாக அவர்கள் நாடு முழுவதிலும் "ஒரு பிரிவு உபசாரப் பயணம்" மேற்கொள்வதுண்டு). இதற்குப் பின்வரும் கருத்துக் களைக் கூறமுடியும்: (1) ஆசியாவுக்குப் பிரிவு உபசாரம், (2) மக்கெதோனியாவுக்குப் பிரிவு உபசாரம் (3)அகாயாவுக்குப் பிரிவு உபசாரம். பவுல் ஓரிடத்தில் "பிரிவு உபசாரம்" சொல்லிய போது, அவர் இன்னொரு இடத்தில் "தொடக்க வணக்கம்" கூறினார் என்பதை நீங்கள் குறிப்பிட முடியும். இவ்விதமாக,*

*அவர் ஆசியாவை விட்டுச் சென்ற போது, அவர் மக்கெதோனியா மற்றும் அகாயா நாடுகளில் "தொடக்க வணக்கம்" கூறத் திட்டமிட்டிருந்தார் (அப். 19:21). அவர் அகாயாவை விட்டுப் புறப்பட்டபோது, அவர் எருசலேம் மற்றும் ரோமாபுரிக்கு "தொடக்க வணக்கம்" கூறத் திட்டமிட்டிருந்தார் (19:21, 22). பிரிவு உபசாரம் என்பது கவலைக்குரியதாகும்; ஆனால் ஒருவர், தேவனுடைய திட்டத்தில் நிலைத்திருந்தால், "பிரிவு உபசாரங்களை" த் தொடர்ந்து - வாழ்வின் முடிவில் கூட - "தொடக்க வணக்கங்கள்" வருகின்றன! (விரும்பத்தக்கதென்றால், நீங்கள் "பிரிவு உபசாரப் பயணங்கள்" என்பவை எப்பொழுதுமே "கடைசிப் பயணங்கள்" என்று இருப்பதில்லை என்பதைக் குறிப்பிடக் கூடும்; சில வேளைகளில் இசைக் கலைஞர்கள் தாங்கள் ஓய்வு பெற்றதை ரத்து செய்ய முடிவு செய்கின்றார்கள். கிரேக்கம் மற்றும் ஆசியாவில் இருந்த கிறிஸ்தவர்களை மறுபடியும் ஒருபொழுதும் காண்பதில்லை என்று பவுல் நினைத்தார், ஆனால் அவர்களை அவர் மறுபடியும் கண்டார் என்பது உறுதி.)*

---

குறிப்புகள்

[1]பவுலின் மற்ற எல்லா முடிவுகளிலும் போலவே, இதைச் செய்யும் முன்னும் அவர் கர்த்தரிடத்தில் ஆலோசனை கேட்டார் என்பது நிச்சயம் என்று நான் எண்ணுகின்றேன். [2]தேவனால் தரப்பட்டிருந்த வாய்ப்பைப் பவுல் பயன்படுத்தியிராததாகப் பதிவாகியுள்ள நிகழ்ச்சி இது ஒன்று மட்டுமேயாகும். [3]மறுபடியும் அவர்களைப் பார்க்கும் எதிர்பார்ப்பு பவுலுக்கு இல்லாதிருந்ததால், அப். 20:18-35ல் இருந்தது போன்ற புத்திமதிகளையே அவர் அங்கும் கூறியிருக்கலாம். [4]ஒருவேளை அவர் அங்கு, பயணம் செய்தல் கடினமாயிருக்கக் கூடிய குளிர் கால மாதங்களில் தங்கியிருந்திருக்கலாம். [5]இந்த நிருபமானது தெர்த்தியு (ரோமர் 16:22) என்பவர் எழுதும்படியாகச் சொல்லப்பட்டது, இவர் அநேகமாய் கெங்கிரேயாவில் வாழ்ந்த பெபேயாளால் (ரோமர் 16:1, 2) ரோமாபுரிக்குக் கூட்டிச் செல்லப்பட்டிருக்கலாம். (கெங்கிரேயா என்பது கொரிந்து பட்டணத்தின் கடல் துறைமுகங்களில் ஒன்றாகும்). ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் ரோமாபுரிக்குச் சென்றார்கள் என்பது இந்நிருபத்தில் உள்ள ஆர்வமான ஒரு குறிப்பு ஆகும் (ரோமர் 16:3, 4); ஏதோ ஒரு வேளையில், அவர்கள் எபேசு பட்டணத்தை விட்டு ரோமாபுரிக்குத்

*திரும்பிப் பயணம் சென்றனர். இது அநேகமாய் அவர்கள் வியாபாரக் கவனிப்புகளுக்காக இருந்திருக்கலாம். ரோமருக்கு எழுதிய நிருபத்தின் பொருளடக்கம் பற்றிய இன்னும் அதிக விபரங்களுக்கு "புதிய ஏற்பாட்டு ஆராய்ச்சி'' என்ற இதழில் காணவும். [6]அப். 20:4ல் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ள தீமோத்தேயு, கொரிந்துவில் பவுல் ரோமருக்கு நிருபத்தை எழுதும்போது உடன் இருந்தார் (ரோமர் 16:21). மறுபடியுமாக, அப். 20:4ன் சோபத்தர் என்பவர், ரோமர் 16:21ன் சொசிபத்தர் என்பவரானால் (''சோபத்தர்'' என்பது ''சொசிபத்தர்'' என்பதன் குறுவடிவமாகும்), கொரிந்துவில் பவுலுடன் இன்னொரு பிரதிநிதியும் இருந்தார் என்று நிச்சயமாய் அறிகின்றோம். [7]செக்குந்து என்றால் "இரண்டாவது"* (Second) *என்று அர்த்தப்படுகின்றது. அவர் தம்முடைய தகப்பனாருக்கு இரண்டாவது மகனாக இருந்திருக்கலாம்-அல்லது இது அவர் ஒரு அடிமையாகவும், "ஒரு எண்ணை விடச் சற்று மேலானவராகவும்'' இருந்தார் என்பதைச் சுட்டிக்காட்டலாம். ரோமர் 16:22, 23ல் தெர்தியு ("மூன்றாவது") மற்றும் குவர்த்து (''நான்காவது'') ஆகியோர் குறிப்பிடப்படுகின்றனர். [8]அப். 19:29க்கான குறிப்புகள் மற்றும் அடிக்குறிப்புகளைக் காணவும். [9]பின்னாளில் தீகிக்கு, பவுலுடன் ரோமாபுரியில் இருந்தார் (எபே. 6:21; கொலோ. 4:7) மற்றும் பவுலின் விடுதலையின்போது தீகிக்கு அவருடன் பயணம் சென்றார் (தீத்து 3:12; 2 தீமோ. 4:12). [10]இந்தத் துரோப்பீமுவைப் பவுல் தேவா லாயத்தினுள் கூட்டிக்கொண்டு வந்ததாக அவர்கள் பின்னாளில் குற்றம் சாட்டினார்கள் (2:29). பவுலின் வாழ்வின் பிற்காலப் பகுதிகளில் அவருடன் துரோப்பீமு பயணம் சென்றார் (2 தீமோ. 4:20).*

*[11]இப்படி நடந்திருப்பது மிகவும் அரிது, ஏனென்றால் பயணத்தில் அவ்வப்பொழுது பவுல் இம்மனிதர்களிடமிருந்து பிரிந்து சென்றிருந்தார் (20:5, 13, 14). செய்தியாளர்கள்தான் அந்த நன்கொடையை எடுத்துச் சென்றிருப்பார்கள். [12]பெயர் குறிப்பிடப்பட்டவர்கள் அனைவரும் இல்லையென்றாலும், அவர்களில் பெரும்பாலானவர்கள் பிரசங்கியார் களாகவோ அல்லது பிரசங்கியாராகப் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தவர் களாகவோ இருந்தார்கள், எருசலேம் பயணத்தின்போது, பவுல் பயிற்சியளிக் கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டார் என்பதில் சந்தேகம் எதுவுமில்லை. இன்னொரு விதமாகவும் இருக்கலாம்: புறஜாதி பிரதிநிதிகள் உதவிப் பணத்தை எருசலேமுக்கு எடுத்துச் சென்று யூத சகோதரர்களின் கைகளில் அதைக் கொடுக்கும்போது தனிப்பட்ட முறையில் "நன்றி" சொல்ல முடிந்திருப்பதும் ஒரு நடைமுறை நோக்கமாக இருந்திருக்கும். முடியு மானால் இதை "தனிப்பட்ட முறையில் வைத்துக் கொள்வது" ஒரு நல்ல கருத்துதான். [13]மக்கெதோனியாவில் ஏற்பட்ட முரண்பாட்டைப் பவுல் எதிர்த்து நின்றார் (2 கொரி. 7:5); இப்பொழுது அவர் அகாயாவில் ஒரு முரண்பாட்டைக் கண்டிருந்தார்.[14]எருசலேமுக்குச் செல்வதே பவுலின் நிறைவான இலக்காய் இருந்தது, ஆனால் கிடைத்த கப்பலானது சீரியாவுக் குச் செல்லுவதாக இருந்தது. பவுல் தொடக்கத்தில் சீரியாவில் உள்ள அந்தியோகியா சென்று அங்கிருந்த சகோதரர்களிடத்தில் அறிக்கை செய்து கொண்டு, பிறகு நன்கொடையை எடுத்துக் கொண்டு அங்கிருந்து எருசலேமுக்குச் செல்லத் திட்டமிட்டிருக்க வேண்டும். [15]யூதர்களின் மற்ற சூழ்ச்சியான திட்டங்களை 9:24; 23:16; 25:3 ஆகிய வசனங்களில் காணவும்.*

*2 கொரிந்தியர் 11:26ஐக் காணவும். [16]பஸ்கா பண்டிகைக்குச் செல்லும் புனிதப் பயணிகளின் வாடகைக் கப்பலில் எருசலேம் செல்லப் பவுல் திட்டமிட்டிருந்ததாக ஒரு கருத்துக் கூறப்படுகின்றது. இருப்பினும், பவுல், (எருசலேம் இருந்த) பலஸ்தீனத்திற்கு அல்ல, மாறாக (அந்தியோகியா நகரம் இருந்த) "சீரியாவுக்குக் கடற்பயணம் செல்ல" திட்டமிட்டிருந்ததாக வசனம் கூறுகின்றபடியால், இவ்வாறு நடந்திருக்க வாய்ப்பில்லை. [17]சேகரிக்கப் பட்ட பணம் பவுலிடம் இருந்தது என்பதை யூதர்கள் அறிந்தார்களா இல்லையா என்பது நமக்குத் தெரியவில்லை, ஆனால் அவ்விஷயத்தை இரகசியமாய் வைத்துக் கொள்ள வழியில்லாது இருந்திருக்கலாம். யூதர்கள் பவுலைக் கொள்ளையடித்திருந்தால் (அல்லது அவரிடத்தில் இருந்ததைக் கொள்ளையடிக்கும்படி செய்திருந்தால்), அவரது மரணமானது மார்க்க ரீதியான ஊக்குவித்தல் என்றிராமல், குற்றமனப்பான்மையால் ஊக்குவித்தல் என்பதாயிருந்திருக்கும். [18]செய்தியாளர்கள் எப்பொழுது பவுலிடம் இருந்த பிரிந்து சென்றார்கள் என்பதை லூக்கா குறிப்பாகக் கூறவில்லை. இங்கு குறிப்பிடப்படும் காட்சியென்பது நடந்திருக்கக் கூடிய வாய்ப்புள்ள ஒன்றாகும். அட்டவணையிடப்பட்ட ஏழு மனிதர்களும் துரோவா சென்றார்கள் என்பதற்குக் கூட உறுதிப்பாடு இல்லை. வசனம் 5ல் உள்ள "இவர்கள்" என்ற வார்த்தையானது, வசனம் 4ல் குறிப்பிடப் பட்டவர்களில் இருவரையாவது குறிப்பிடக் கூடும், ஆனால், அநேகமாய் அந்த ஏழு பேருமே துரோவாவுக்குச் சென்றிருக்க வேண்டும். [19]எருசலேமில் இருந்த பரிசுத்தவான்களில் ஏழைகளாயிருந்தவர்களுக்கென்று சேகரிக்கப்பட்ட இந்தப் பணம் பற்றிய நிகழ்ச்சியானது, "கை விடப்பட்ட நிலையில்" உள்ள கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே சபை நிதியில் இருந்து உதவியளிக்கப்பட வேண்டும் என்ற கருத்தைக் கூறுவதற்குச் சில சகோதரர்களால் பயன்படுத்தப்படுகின்றது. இப்பாடம் முழுவதிலும் நான், உபத்திரவத்திற்கு நிவாரணம் தேடுவது மட்டுமே பணம் சேகரிப்பின் நோக்கமல்ல என்று வலியுறுத்த முயற்சி செய்திருக்கின்றேன் (எருசலேமிருந்த ஏழைக் கிறிஸ்தவர்கள் பட்டினியாய் இருந்திருந்தால், பணம் சேகரித்தல் முடிவடையு முன்பே அவர்கள் இறந்திருப்பார்கள்), ஆனால் அது அன்பையும், மதிப்பையும் வெளிப்படுத்துவதற்காகச் செய்யப்பட்டது. உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினரல்லாதவர்களிடத்தில் நாம் இவ்வகை யான அன்பின் வெளிப்பாடுகளைக் காட்டுவது தேவையாய் இருக்கின்றது. [20]மேலும், அப். 20:22ல் பவுல் இந்த அபாயங்களைப் பற்றி பேசும்போது, அவர் மக்கெதோனியாவிலிருந்து புறப்பட்டது முதல் ஒரே ஒரு நகரத்தில் (துரோவாவில்) மட்டுமே இருந்திருந்தார். ஆகையால், "பட்டணங்கள் தோறும்" என்ற சொற்றொடரானது மக்கெதோனியாவில் இருந்த ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நகரங்களைக் குறிப்பதாகும்.*

*[21]உண்மையில் அவர்கள், பிலிப்பி பட்டணத்தில் கடல் துறைமுகமாய் இருந்த நெயோப்போலியில் இருந்து கடற்பயணம் சென்றிருக்க வேண்டும் (16:11, 12). [22]இதற்கு முன் அவ்விடத்திலிருந்து ஏஜியன் கடலைக் கடந்து செல்லப் பவுலுக்கு இரண்டு நாட்கள் மட்டுமே ஆகியிருந்தது (16:11); அந்த சமயத்தில் சாதகமான காற்று வீசியிருக்கலாம், இந்த சமயத்தில் காற்றானது சாதகமற்று இருந்திருக்கலாம். [23]"நாங்கள்" என்ற வார்த்தை லூக்காவுடன் - தீத்து மற்றும் 20:4ல் பெயர் குறிப்பிடப்படாத மற்றவர்கள் எவரும் -*

இன்னும் அதிகமானவர்களை உள்ளடக்கியிருக்கும். ஆனால் அது நிச்சயமாக லூக்காவை உள்ளடக்கிற்று. மீண்டும் ஒருமுறை, லூக்கா எல்லா விபரங்களையும் தரவில்லை. மக்கெதோனியா செல்வதென்பது பவுலின் தொடக்க திட்டத்தில் இல்லை என்பதால், லூக்காவும் மற்றவர்களும் துரோவாவில் தன்னுடன் சேர்ந்து கொள்ளும்படியாகப் பவுல் தொடக்கத்தில் திட்டமிட்டிருக்கலாம்; அல்லது தீத்துவுடன் கொரிந்து சென்ற பெயர் குறிப்பிடாத சகோதரர்களில் லூக்காவும் இருந்திருக்கலாம். அவர்கள் மக்கெதோனியாவுக்குப் பவுலுடன் திரும்பி வந்த பிறகு, பிலிப்பி நகருக்குக் கடற் பயணம் சென்றிருக்கலாம்.

## *என்ன செய்ய வேண்டும்?*

***அவர்களை நினைவுகூருங்கள்:*** *"தரித்திரரை நினைத்துக் கொள்ளும்படிக்கு மாத்திரம் சொன்னார்கள்; அப்படிச் செய்யும்படி அதற்கு முன்னமே நானும் கருத்துள்ளவனா யிருந்தேன்" (கலா. 2:10).*

***அவர்களை மதியுங்கள்:*** *"என் பிரியமான சகோதரரே, கேளுங்கள்; தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், தம்மிடத்தில் அன்புகூருகிறவர் களுக்குத் தாம் வாக்குத்தத்தம் பண்ணின ராஜ்யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும் தெரிந்து கொள்ளவில்லையா? நீங்களோ தரித்திரரைக் கனவீனம் பண்ணுகிறீர்கள் ..." (யாக். 2:5, 6).*

***அவர்களுக்கு உதவுங்கள்:*** *"மக்கெதோனியாவிலும் அகாயாவிலுமுள்ளவர்கள் எருசலேமிலுள்ள பரிசுத்தவான் களுக்குள்ளே இருக்கிற தரித்திரருக்காகச் சில பொருள் சகாயம் செய்ய விருப்பங் கொண்டிருக்கிறார்கள்" (ரோமர் 15:26).*

*"ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடா விட்டால் பிரயோஜனமென்ன?" (யாக். 2:15, 16).*

***அவர்களுக்குப் போதியுங்கள்:*** *"கர்த்தருடைய ஆவியானவர் என் மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர் களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்க வும், ... என்னை அனுப்பினார் ..." (லூக். 4:18, 19).*

***அவர்களை அழையுங்கள்:*** *"நீ விருந்து பண்ணும்போது ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் அழைப்பாயாக" (லூக். 14:13).*